| | | 186,817,251 | 156,575,076 |
| **இயக்கச்செலவுகள்** | | | |
| சொந்த வேதனாதிகள் | 17 | 126,750,510 | 112,840,723 |
| போக்குவரத்து | 18 | 198,550 | 469,675 |
| உபயோகித்த வாழங்களும் நுகர்பண்டங்களும் | 19 | 3,418,066 | 3,906,074 |
| பேணல் | 20 | 1,471,539 | 1,518,939 |
| ஒப்பந்தம்சார் சேவைகள் | 21 | 2,494.033 | 1,719.164 |
| ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | 22 | 369,348 | 634,189 |
| தேய்மானம் மற்றும் செலுத்தத் தீர்த்தல் செலவுகள் | | 8,034.439 | 8,295.730 |
| பிறஇயக்கச் செலவுகள் | 23 | 8,588,611 | 10,420,540 |
| மஹாபொல | | 4,949,900 | 5,896,400 |
| கல்வித்துணைப்பணம் | | 17.272.300 | 14.354.100 |
| ஆராய்ச்சி வலுவூட்டலுக்கான செலவுகள் | | | 135,754 |
| தலைமை அபிவிருத்திக்கான செலவுகள் | | | 50,000 |
| மாணவர்களை மையப்படுத்தி கல்விசார் செலவுகள் | | | 88,000 |
| தகுதி வளர்ப்பு மட்டிலான செலவு | | 478.215 | |
| வேறிடத்தில் நிறுவுதல் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டத்திறகான செலவு | | 10.297.372 | |
| மொத்த இயக்கச் செலவு | | 184,322,883 | 160,329,288 |
| மிகை.ஃ.இயக்கும் நடவடிக்கைகளில் குறை | | 2,494,368 | (3,754,212) |
| சொத்துக்களை தீர்ப்பதிலான இலாபம் | | 203,900 | 0 |
| | | 2,698,268 | (3,754,212) |

எஸ்.பீ.டி. பீரிஸ்
சிரேட்ட உதவிக்கணக்காள

**தொழிநுட்பவியல் நிறுவகம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்**
**2016 திசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பணவோட்டக் கூற்று**

| | குறிப்புகள் | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| இயக்க நடவடிவக்கைகளில் இருந்தான பணவோட்டம் | | | 2,698,268 | | (3,754,212) |
| சாதாரண | | | | | |
| நடவடிக்கையிலிருந்தான | | | 8,034,439 | | 8,295,730 |
| மிகை ∴ குறை | | | (8,034,439) | | (7,500,730) |
| காசில்லா அசைவுகள் | | | 4,542.001 | | 846,088 |
| தேய்மானம் | | | | | |
| செலுத்தித் தீர்த்தல் | | | | | |
| பணிக்கொடையிலிருந்தான அதிகரிப்பு ∴ வீழ்ச்சி | | | | | |
| ஏனைய சீராக்கல்கள் | | | | | |
| சொத்துகள் கையளித்திலான இலாபம் | | | | | |
| தொழிற்பாடு மூலதனத்தில் அதிகரிப்பு ∴ தேய்மானம் | | | | | |
| பெறவேண்டியவற்றில் (வீழ்ச்சி∴அதிகரிப்பு) | | | | | |
| பிற்போட்டவருமானத்தில் அதிகரிப்பு (வீழ்ச்சி) | | | | | |
| செலுத்தவேண்டியற்றில் அதிகரிப்பு (வீழ்ச்சி) | | | | | |
| திரண்ட செலவுகளிலான (வீழ்ச்சி ∴ அதிகரிப்பு) | | | | | |
| முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான பணவோட்டம் | | | | | |
| பெறாத்தொகுதி மற்றும் சாதனங்கள் | | | | | |
| காணிக்கான கொடுப்பனவு (மூலதனம்) | | | | | |
| ஏனைய கருத்திட்டங்களுக்கான கொடுப்பனவு | | | | | |
| சொத்துக்களின் விற்பனை | | | | | |
| முதலீடுகளிலான அதிகரிப்பு | | | | | |
| முதலீட்டு நடடிவக்கைகளில் இருந்தான நிகரப் பணவோட்டம் | | | | | |
| மூலதன மானியம் | | | | | |
| மட்டுப்படுத்திய நிதியங்களிலிருந்து அதிகரிப்பு ∴ வீழ்ச்சி | | | | | |
| நன்கொடைகளில் அதிகரிப்பு (வீழ்ச்சி) | | | | | |
| நிதியளிப்பு நடவடிக்கைகளில் இருந்தான நிகரப் பணவோட்டம் | | | | | |
| பணமும் பணத்துக்கு ஈடானவற்றிலும் | | | | | |

நிகர அதிகரிப்பு (வீழ்ச்சி)
காலப்பகுதியின் ஆரம்பத்தின்
போதான பணமும்
பணத்துக் ஈடானவையும்
காலப் பகுதியின் முடிவில்
பணமும் பணத்துக்கு
ஈடானவையும்

எஸ்.பீ.டி. பீரிஸ்
சிரேட்ட உதவிக்கணக்காளர்

## 21 கணக்காய்வுக் குழு அறிக்கை

### உள்ளக கணக்காய்வு அறிக்கை

உள்ளகச் கணக்காய்வுப் பிரிவு மொறட்டுவைப் பல்கலைக்கழகத் தொழிநுட்பவியல் நிறுவனத்தின் 2016ஆம் ஆண்டுக்கான தொழிநுட்பவியல் நிவகத்தின் 2016ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்ட உள்ளகக்கணக்காய்வு நிகழச்சித்திட்டத்தைத கணக்காய்வுக் குழு மற்றும் முகாமைத்துவச் சபையினதும் அங்கீகாரத்துடனும் கணக்காய்வாளர் அதிபதியின் ஒருப்பாட்டெனும் பின்வரும் குறிப்பிடத்தக்க பிரதேசத்தை உள்ளடக்கி உள்ளக கணக்காய்வுக் கடமையை நடாத்தியது.

1. முன்கணக்காய்வுகள்
    - பல்கலைக்கழக ஏற்பாட்டு நிதியத்தை விடுவித்தல்
    - பணிக்கொடைக் கொடுப்பனவு
    - ஓய்வூதிய நிதியத்தை விடுவிப்பு
    - பிணை முறிகளைக் கணக்கிடுதல்

2. காண்புகளின் மட்டில் வழங்கப்பட்ட கணக்காய்வு விசாரணைகள்
    - கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் மாதிரிகள் செவ்வை பார்த்தல்

3. நடாத்தப்பட்ட பிற கணக்காய்வுச் செவ்வை பார்ப்புகள
    - கொள்ளல் கட்டளைகளின் மாதிரிகளில் செவ்வை பார்த்தல்
    - வங்கி இணக்கப்பாடு செவ்வை பார்த்தல்
    - பல்வேறு முற்பணக்கொடுப்பனவுகள செவ்வை பார்த்தல்

4. கணக்காய்வுக் குழு
    மொ.ப.தொ.நி.தின் கணக்காய்வுக்குழு மொ.ப.தொ.நி.தின் நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற்கென ஆகக்குறைந்த மூன்று மாதத்துக்கு ஒருமுறையாவது ஒழுங்காக கூடுகின்றது. குழு கணக்காய்வாளர் அதிபதியுடனும் உள்ளகக் கணக்காய்வாலும் அனுப்பப்ட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகளையும் அவை தொடர்பிலான விசாரணைகளையும் அவ் விசாரணைகள் மட்டில் மொ.ப.தொ.நி.தின் பதில்குறிப்புகளையும் கவத்திற் கொள்கின்றது. குழு சிபார்சுகளைச் செய்கின்றது. அத்துடன் திருத்த நடவடிக்கைகள் தொடர்பிலும் பணிப்புரைகளை வழங்குவதுடன் கண்காணிப்பையும் நடாத்துகின்றது.

    மீளாய்வு ஆண்டுக்காலத்தின் போது கணக்காய்வுக்குழு நான்கு முறை கூடியது.

5. பதவியினர்
    மொ.ப.தொ.நி.தின் உள்ளக கணக்காய்வு நடடிவக்கைகள மொறட்டுவைக் பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவிலுள்ள மொ.ப.தொ.நி.தால் குறிப்பிட்டுக் கூறப்பட்ட ஒரு எழுதுநரால் மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தின் சிரேட்ட உதவி உள்ளக கணக்காளரின் மேற்பார்வையின் கீழ் நியமிக்கப்படுவார்.

    மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வுப் பதவியினருக்கும் மொ.ப.தொ.நி.தின் உள்ளக நடவடிக்கைகளை நடாத்துவதற்கான ஆதரவம் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. } எச்சஈடீ/சீ/ஜரீயூஎம்/ 6/16/24 | මබේ අංකය / உமது இல. / Your No. } | දිනය / திகதி / Date } 2017 யூலை 27 |

பணிப்பாளர்,
தொழில்நுட்ப நிறுவகம்
மொறட்டுவை பல்கலைக்கழகம்.

**மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2000 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவக சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 2000 இன் 03 ஆம் இலக்க மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவக சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் பணிப்பாளருக்கு 2017 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமையின் காரணமாக ரூபா 41,497,929 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுமானத்தேய்வு விகிதாசாரத்தை மதிப்பீடு செய்யும் போது ஏற்படும் வழுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம் நீண்ட கால முதலீடுகளின் பெறுமதி ரூபா 14,433,695 ஆக இருந்த போதிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்டோலைகளின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 14,628,050 ஆகக்

காண்பிக்கப்பட்டமையால் ரூபா 194,361 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாக பாடநெறிக்காக (NDT) விண்ணப்பக் கட்டண வருமானம் ரூபா 884,456 ஆக இருந்த போதிலும், பட்டோலையின் பிரகாரம் அது ரூபா 907,050 ஆனமையால் ரூபா 22,594 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

வெளிநாட்டுக் கற்கை விடுமுறை பெற்றுச் சென்ற விரிவுரையாளர்களிடமிருந்தும் மற்றும் பிணை முறிகளை மீறியதன் காரணமாக அறவிடவேண்டிய ரூபா 1,572,914 தொகை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்காக விரிவுரையாளர்களினால் 2016 சனவரி 26 ஆந் திகதி இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறுவனத்தினால் இந்தப் பணத்தை பல்கலைக்கழக சேமலாப நிதியத்தலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 45(2)(1)(xv) ஆம் இலக்கப் பிரிவு | பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது பணமொன்று இருந்த போதிலும், சட்டரீதியாக முதலீடு செய்யக்கூடிய ஏதாவது சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்தல் அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது வங்கியொன்றில் நிலையான வைப்புப் பணமாக வைப்புச் செய்தல் கட்டுப்பாட்டுச் சபையின் பணியாகக் |

| | | |
|---|---|---|
| | | குறிப்பிடப்பட்ட போதிலும், 2017 மார்ச் 20 ஆந் திகதி வரையிலும், ரூபா 1,494,483 தொகையான 04 நிதியங்கள் ஸ்தாபிக்கப்பட்டு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், எந்தவொரு முதலீட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தாது தொழில்நுட்ப நிறுவகத்தின் நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | உள்நாட்டு இறைவரிச் சுற்றறிக்கை 07 உழைக்கும்போதே செலுத்தும் வரி | மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி நிதியாளராக சேவையாற்றி ஏழுவருட விடுமுறை பெற்றிருந்த தொழில்நுட்ப நிறுவகத்தின் சிரேஷ்ட உதவி நிதியாளராக சேவையாற்றிய உத்தியோகத்தருக்கு 2015 திசெம்பர் 31 முதல் 2016 யூலை 31 வரையான காலத்திற்காக மாதாந்தம் ரூபா 69,152 வீதம் 08 மாதங்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 553,216 கூட்டுத்தொகையான சம்பளத்தின் அடிப்படையில் 16 சதவீதமான உழைக்கும் போதே அறவிடும் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதிச் சுற்றறிக்கை கடித இலக்கம் 2/2015 இன் விடய இலக்கம் II | ஏதாவது ஒரு மாதமொன்றில் செலுத்தப்படாத மஹபொல புலமைப்பரிசில் பணம் அடுத்துவரும் மாதத்தின் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மஹபொல நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு மீள அனுப்பப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 384,600 மீதியொன்று 2016 திசெம்பர் 31 வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிவிளைவுகள் ரூபா 2,698,268 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,754,212 பற்றாக்குறையாக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,452,480 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினத்திற்காகக் கிடைத்த அரசாங்க மானியம் ரூபா 28,900,000 இனால் அதாவது 23 சதவீதத்தால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதிவிளைவுகளைப் பகுப்பாய்வு செய்தபோது 2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 3,510,686 தொகையான பற்றாக்குறை 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 2,698,268 மிகைக்குள்ளாகியிருந்ததுடன் இந்தக் கால எல்லையில் நிதிவிளைவுகளில் கவனத்தில் கொள்ளக்கூடிய முரணொன்று அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் நிதி விளைவில் ஊழியர் ஊதியம் சீராக்கப்பட்டதன் பின்னர் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 59,256,335 தொகையான நிறுவனத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 129,448,778 ஆக இருந்தது.

### 3.2 நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

நிறுவகத்தினால் வெளிநிறுவனங்களுக்கு எதிராக ரூபா 05 மில்லியன் நட்டஈடு கோரி மொறட்டுவ மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் அந்த வழக்கின் பிரதிவாதியினால் அந்த வழக்கு தொடர்பான பிணையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பட்டப்பின்இரண்டாம் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணங்குகின்ற வகையில் பௌதீக சூழலொன்றை ஏற்படுத்துவதற்கும் மாணவர்களுக்கு சமூகத்தினதும் கைத்தொழில்துறைகளினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய மற்றும் இலகுவாக அடையக்கூடிய கற்பித்தல் மற்றும் திறன் பயிற்சியளித்தல் திட்டமொன்றை வடிவமைப்பதற்கும், பிரயோகரீதியில் பொருத்தமான ஆராய்ச்சினை ஊக்குவிக்கின்ற சூழலொன்றை தாப்பிப்பதற்கும், தகைமைபெற்ற செயற்பாடுள்ள குழுவொன்றை உருவாக்குதல் மற்றும் மாணவர்களின் முழுமையான அபிவிருத்தி மேம்பாட்டை ஏற்படுத்துகின்ற சுற்றாடலை வடிவமைத்தல் மற்றும் நிறுவகத்தின் சகல துறைகளிலும் தரத்தையும் செயற்திறனயும் உறுதிப்படுத்துகின்ற முகாமைத்துவ முறைமையொன்றை மேம்படுத்தும் நோக்கத்துடன் மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு இணைந்த நிறுவனமொன்றாக இந்த நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது விளையாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 100,000 வீதம் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஆண்டின் போது அதற்காக எத்தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தில் 09 கற்கைப் பிரிவுகள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013/2014, 2014/2015 ஆம் கல்வி ஆண்டுகளில் 03 கற்கைப் பிரிவுகளுக்கு சேர்க்கப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையையும் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையும் ஒப்பீடு செய்த போது முறையே 6 சதவீதம் முதல் 47 சதவீதம் வரையிலான வீச்சில் 11 மாணவர் வெற்றிடங்களும், 5 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையிலான வீச்சில் 09 வெற்றிடங்களும், 2015/2016 ஆம் கல்வி ஆண்டில் 02 கற்கைப் பிரிவுகளில் 33 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையில் 06 மாணவர் வெற்றிடங்களும் காணப்பட்டன.

(இ) (i) 2016 ஆம் ஆண்டின் போது முதலாவது வருட பரீட்சைக்குத் தோற்றிய 504 மாணவர்களில் 334 மாணவர்கள் மாத்திரம் பரீட்சையில் சித்தியடைந்திருந்ததுடன் மாணவர்களில் 34 சதவீதத்தினர் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை. அந்த சித்தியடையாத மாணவர்கள் தொடர்பாக பரீசித்த போது எந்திர பொறியியலாளர் பிரிவிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 36 சதவீதமும் நெசவு மற்றும் ஆடைகள் தொழில்நுட்ப பிரிவிலிருந்து தோற்றிய மாணவர்களில் 39 சதவீதமும் சித்தியடைந்திருக்கவில்லை.

(ii) 2016 ஆம் ஆண்டின் போது இரண்டாவது வருட பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 484 பேரில் 357 பேர் மாத்திரம் பரீட்சையில் சித்தியடைந்திருந்துடன் மாணவர்களில் 27 சதவீதத்தினர் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை. அந்த இரண்டாம் வருட சித்தியடையாத மாணவர்கள் தொடர்பாக பரீட்சித்த போது எந்திர பொறியியலாளர் பிரிவிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 41 சதவீதமும் நெசவு மற்றும் ஆடைகள் தொழில்நுட்பப் பிரிவிலிருந்து தோற்றிய மாணவர்களில் 35 சதவீதமுமாக சித்தியடைந்திருக்கவில்லை.

(ஈ) மாணவர்களின் போட்டித் தன்மையினை அதிகரிப்பதற்காக 09 கல்விசார் பிரிவுகளின் மூலம் பாடவிதானம் சார்ந்த 03 நிகழ்ச்சித்திட்டங்கள் வீதமும் பாடவிதானத்திற்குப் புறம்பான 03 நிகழ்ச்சித்திட்டம் வீதமும் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கற்கைப் பிரிவுகள் ஒன்றிணைந்து ஒரு கண்காட்சியும் ஒரு விளையாட்டு நிகழ்ச்சித்திட்டமும் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(உ) 2016 ஆம் ஆண்டில் மாணவர்களுக்காக புதிதாக தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் அளவிடை மதிப்பீடு (QS) என்ற 02 பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டிருந்த போதிலும் அந்தப் பாடநெறிகள் 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவிலர்லை.

(ஊ) புத்தாக்கம் மற்றும் வடிவமைப்புத் தன்மையை உயர்வடையச் செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,000 தொகையான நிதிஏற்பாடு ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், நிதிஏற்பாட்டுத் தொகையிலிருந்து 48 சதவீதம் அதாவது ரூபா 478,215 தொகை செலவிட்டு 39 ஆராய்ச்சிகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.2 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியில் வெற்றிடங்கள் முறையே 28 பேரினையும், 11 பேரினையும் உள்ளடக்கியிருந்ததுடன் அது முறையே 48 சதவீதம் மற்றும் 20 சதவீதமாக இருந்தது.

(ஆ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் III ஆவது அத்தியாயத்தின் 18.1 (1) ஆம் பிரிவின் பிரகாரம் உயர் கல்வி நிறுவனமொன்றில் ஊழியர் எண்ணிக்கைகளில் வெற்றிடம் ஏற்படும் என அறிந்ததும் உடனடியாக உரிய நியமன அதிகாரி அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் 2015 சனவரி 15 முதல் காணப்பட்ட நிறுவகத்தின் பிரதி நிதியாளர் பதவி 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தகைமைபெற்ற பதவியணியொன்றை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மீளய்வாண்டின் போது 50 வெளி விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதற்காக ரூபா 15,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 14,957,457 தொகை செலவில் 21 வெளி விரிவுரையாளர்களும் மற்றும் அதற்கு மேலாக 35 மதியுரையாளர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் உரிய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 28 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

5.2 **உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு தொடர்பாக டீ.எம்.ஏ/2009(1) ஆம் வழிகாட்டியின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் தனியான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | இணங்காமைகள் |
|---|---|
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு சரியான எதிர்வு கூறலின்றி தயாரிக்கப்பட்டிருந்தமை |
| (இ) நிதிய முகாமைத்துவம் | ஆரம்பிக்கப்பட்ட நிதியங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) செயற்பாட்டு நிர்வாகம் | உடன்படிக்கை மற்றும் பிணைகளை மீறுதல் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்காமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம் :- எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2016 திசம்பர் 31 ஆம் திகதி முடிந்த ஆண்டுக்கான மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்களிலான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கான பதிலும் 2000 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் நியதிகளின் கீழும் 1998 இன் இல.16 பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 1089 (1) இன் கீழ் அதன் நடவடிக்கைகளும்

| கணக்காய்வுக் கருத்து | விவரணம் - எடுத்த நடவடிக்கை |
|---|---|
| **2. நிதிக் கூற்றுக்கள்** | **2. நிதிக் கூற்றுக்கள்** |
| **2.2 நிதிக்கூற்றுகள் பற்றியதான அபிப்பிராயங்கள்** | **2.2. நிதிக்கூற்றுகளிலான அபிப்பிராயம்** |
| **2.2.1 இலங்கை அரசாங்கத்துறை கணக்கிடுதல் நியமனங்கள்** | **2.2.1 இலங்கை அரசாங்கத்துறை கணக்கிடல் நியமங்கள்** |
| இலங்கை அரசாங்கத்துறைக் கணக்கிடல் 07 ஆம் நியமங்களின் நியதிகளின்படி நடைமுறை இல்லா சொத்துக்களின் உபயோக வாழ்வுகாலம் ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்படவில்லை ஆகவே ரூ 41497929 பெறுமதியான சொத்து, பொறித்தொகுதி மற்றும் சாதனம் என்பன முழுமையாக மதிப்பிறக்கம் செய்யப்படவில்லை. எவ்வாறாயினும் அவை இன்னமும் உபயோகத்தில் உள்ளன. இலங்கை அரசாங்கத்துறை கணக்கிடுதல் நியமம் 03 இன் நியதிகளுக்கமைய தேய்மான வீதத்தை மதிப்பிடுதலின் ஏற்பட்ட தவறைத் திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2016 திசம்பர் 31 ஆம் திகதியளவில் முழுதாக தேய்மானம் செய்யப்பட்டது. சொத்து மற்றும் சாதனமும் மீள மதிப்பீடு செய்யப்பட உள்ளதுடன் அந்த மீள் மதிப்பீட்டுக்கு இவ்வேளையில் அப்பணியில் ஈடுபட்டுள்ளது. |
| 2.2.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள் | 2.2.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள். |
| பின்வருவன அவதானிக்கப்பட்டன (எ) நிதிக்கூற்றுக்களின்படி நெடுந்தவணை முதலீடுகளின் பெறுமானத் தொகை ரூ 14433695 ஆகும். எவ்வாறாயினும், கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையின்படி அப்பெறுமானத்தின் தொகை ரூ14628,056 ஆக இருந்தது. ஆயின் வித்தியாசம் ரூ 194,361 ஆகும். | (எ) கூற்றுக்களிலும் அட்டவணைகளிலும் காணப்பட்ட வித்தியாசத்தை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதில் செய்யப்பட வேண்டிய சீராக்கல் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (பீ) தேசிய தொழிநுட்பவியல் டிப்ளோமா (தே.தொ.டி) வுக்கான விண்ணப்பக் கட்டணத்தின் மீளாய்வு ஆண்டுக்கான வருமானம் அட்டவணையின்படி ரூ.884,456 இருந்த போதும் அட்டவணையின்படி அது ரூ 907,050 இருந்ததன் காரணமாக ரூபா 22594 வித்தியாசம் இருந்தது அவதானிக்கப்பட்டது. | (பீ) இந்த வித்தியாசத்தை சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 2.3. பெற வேண்டியதும் செலுத்த வேண்டியதுமான கணக்குகள் | 2.2 பெற வேண்டியதுமன் செலுத்த வேண்டியதுமான கணக்குகள் |
| ஒப்பந்தத்தை மீறியதன் காரணமாக விரிவுரையாளர் ஒருவரிடமிருந்து கல்வி லீவு தொடர்பில் வெளிநாடு சென்றதன் காரணமாக ரூ1572914 என்னும் கொள்கை அறவிட வேண்டியதாயுள்ளது. அத்தொகையை பல்கலைக்கழக ஏற்பாட்டு நிதியத்திலிருந்து அத்தொகையை அறவிடும்படி அவர் 2016 சனவரி 26 ஆம் திகதியன்று ஒப்புக்கொண்டார். இதற்கமைய பல்கலைக்கழக ஏற்பாட்டு நிதியத்திலிருந்து இத்தொகையை அறவிடும் படி 2016 ஆகத்து 26 ஆம் திகதியன்று நிறுவகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.எவ்வாறாயினும் 2016 திசம்பர் 31 அன்று வரை தானும் இத்தொகை அறவிடப்படவில்லை. | ரூ1572914.00 என்னும் தொகைக்கான இலக்க 64764 காசோலை 11.2017 என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைக்கப் பெற்றது. |
| 4. கணக்காய்வுக் கருத்து | விவரணம் - எடுத்த நடவடிக்கை |
| 2.4 சட்டங்கள் விதிகள் ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கவுறாமை | |

| | | |
|---|---|---|
| சட்டங்கள் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் | இசைவுறாமை | |
| (எ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக செய் சட்டத்தின் பிரிவு 45(2)(1)() | பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான எந்தப் பணத்தையும் ஏதாவது ஒரு பிணைமுறியில் முதலிட செய்யலாம் எனக் குறிப்பிட்டிருந்த போதும் அந்தப் பணத்தை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் முதலீடு செய்வதே சட்டபூர்வமாகும். அல்லது ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் நிலையான வைப்பிலிடுவதே மன்றத்தின் கடமையாகும் எவ்வாறாயினும் ரூ 1494482 என்னும் 4 நிதியங்கள் தாபிக்கப்பட்டு 10 ஆண்டுகள் அதாவது 2017 மாச்சு 20 ஆம் திகதியன்று 10 ஆண்டகள் கடந்துவிட்டன. எவ்வாறாயினும் இந்தப் பணம் எந்தவொரு நடவடிக்கையிலும் முதலீடு செய்யப்படாது தொழிநுட்பவியல் நிறுவகத்தின் நடைமுறைக் கணக்கிலேயே வைக்கப்பட்டிருந்தது. | (எ) முகாமைத்துவ சபை அதன் 198 ஆவது கட்டணத்தின் போது இப்பணத்தை கநற்தவணை வைப்புகளில் வைப்பிலிடுவதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) உண்ணாட்டு இறை வரித் திணைக்களத்தின் வரியை உழைக்கும் போதே செலுத்து என்னும் சுற்றறிக்கை 7 | 2015 திசம்பர் 31 ஆம் திகதியிலிருந்து 2016 ஜுலை 31 ஆம் திகதி வரையான காலத்துக்கு அதாவது ஒவ்வொரு மாதமும் ரூ 69152 என்ற வீதத்தில் செலுத்தப்பட்ட சம்பளத்திலிருந்து உழைக்கும் பொதே செலுத்த வேண்டியதான 160 வீதம் அந்த தொழிநுட்பவியல் நிறுவகத்தில் சிரேஷ்ட உதவிக் காசளராகவிருந்த சபாரிக்கல லீவில் சென்றிருந்த முன்பு மொறட்டுவை சிரேஷ்ட உதவிக் காசாளராகவிருந்தவரிடம் செலுத்தப்படவில்லை. | (பீ) உழைக்கும் போதே வரியை செலுத்து என்பதற்கிணங்க அதனைக் கழித்துக் கொள்ளும்படி தொடர்புடையவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (சி) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல.2-2015ஆம் அறிக்கை 11 விடயம். | எந்தவொரு மாதத்திலும் செலுத்தப்படாத மஹாபொல புலமைப்பரிசில் தொகை செலுத்தப்படவில்லையாயினும் அடுத்த மாதத்தின் 20 ஆம் திகதிக்கு முன்பு எது மஹாபொல நம்பிக்கை நிதியத்தக்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்க வேண்டும். 2015 ஆம் ஆண்டிலிருந்து முன் கொண்டுவரப்பட்ட ரூ 384,600 திசம்பர் 31. 2016 | (இ) காட்டப்பட்டவாறான மஹாபொல மற்றும் கல்வித் துணை பண வைப்பு தொடர்ந்து வரும் ஆண்டின் முதல் அரையாண்டுக்கு முன் செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | ஆம் ஆண்டு வரை தீர்க்கப்படாது இருந்துள்ளது. | |
| 3. நிதி சார் மீளாய்வு | 3. நிதிசார் மீளாய்வு | |
| 3.1 நிதிசார் விளைவுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி 2016 திசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டுக்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் முன்னைய ஆண்டுக்கான குறையான ரூ3754212 உடன் ஒப்பிடுமிடத்து மீளாய்வு ஆண்டுக் காலத்தில் 2698,268 ஆக இருந்தது ரூ 6452,480 ஆக முன்னேற்றத்தை எட்டியது. மீளாய்வு ஆண்டுக்கான மீண்டுவரும் செலவுக்கான அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ரூ.28900,000 அல்லது 230 வீதம் அதிகரிப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து மேற்குறிப்பிட்ட முன்னேற்றத்தைக் காட்டியது. மீளாய்வு ஆண்டுக்கான நிதிவிளைவுகளின் பகுப்புகளை முன்னைய 04 ஆண்டுகளுடன் ஒப்பிடுமிடத்து 2012 ஆம் அண்டுக்கான நிறையான ரூ 3510686 உடன் ஒப்பிடுமிடத்து 2016 ஆம் ஆண்டில் ரூ 269,268 வால் மிகையாக காட்டியதுடன் இக்காலப்பகுதியில் கணிசமான அளவு வேறுபாடு அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளில் பணியாளர்களுக்கான ஊதியத்தில் சீராக்கலைச் செய்த பின்பு 2012 ஆம் ஆண்டுக்கான நிறுவகத்தின் உதவுதொகை ரூ 59256335 ஆக நிதி விளைவுகளில் இருந்துள்ளதுடன் இது தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளதுடன் மீளாய்வு ஆண்டுக் காலத்தின் போது இரு 129448778 ஆக இருந்தது. | 3.1 நிதிசார் விளைவுகள் | |
| கணக்காய்வுக் கருத்து | விளக்கம் - எடுத்த நடவடிக்கை | |
| 3.2 நிறுவகத்தால் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை | 3.2 நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கை. | |
| வெளியக நிறுவகம் ஒன்றுக்கு எதிராக ரூபா.05 மில்லியன் நட்ட ஈடாக கோரி மொறட்டுவை மாவட்ட நீதிமன்றத்தில் நிறுவகத்தால் ஒரு வழக்குத் | | |

| | | |
|---|---|---|
| தொடரப்பட்டுள்ளதுடன் அந்த வழக்கின் எதிராளிகள் அவ்வழக்குத் தொடர்பில் உயர்நீதிமன்றத்தல் ஒரு மேன்முறையீட்டைச் செய்துள்ளனர். இது தொடர்பில் கணக்குகளில் அது வெளிக்காட்டப்படவில்லை. | | |
| 4. இயக்கும் மீளாய்வு | 4 இயக்கும் மீளாய்வு | |
| 4.1 நிறைவேற்றம் | 4.1 நிறைவேற்றம் | |
| நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்துக்கு இணைக்கப்பட்ட ஒரு நிறுவகமாகத் தாபிக்கப்பட்டது. இதன் குறிக்கோள் நவீன உயர்நிலைக்குப் பின்னரான பௌதீகச் சுற்றாடலைக் கொண்டதான தொழிநுட்பவியல் நிறுவகத்தை ஒத்ததாக அமைவதற்கும் மாணவர் சமுதாயத்தின் அதிக எண்ணிக்கையினருக்கு கிடைக்கக்கூடியதான அறிவையும் ஆற்றலையும் வழங்கும் வகையிலும் சமூகத்துக்கு கைத்தொழிலுக்கும் தேவையான அறிவை வழங்கும் விதத்திலும் சமூகத்துக்கும் கைத்தொழிலுக்கும் தேவையான அறிவை வழங்கம் விதத்திலும் செயன்முறைக்குப் பொருத்தமான சூழலை உருவாக்குவதற்கும் புத்தாக்கத்தையும் புதிய படைப்புக்களை உரவாக்குவதற்கும் தகமை கொண்டது எண்ணம் கொண்டதுமான பதவியினர் குழு ஒன்றை உருவாக்கி அது மாணவரின் அபிவிருத்தியை மேம்படுத்துவதாகவும் நிறுவகத்தில் எல்லா மட்டங்களிலும் முகாமைத்தவ முறைமை ஒன்றை உறுதி செய்யும் விதத்திலுமானதோர் நிறுவகத்தை அபிவிருத்தி செய்யும் விதத்திலுமான நோக்குடனேயே நிறுவகம் தாபிக்கப்பட்டது. பின்வருவன அவதானிக்கப்பட்டன. | எ. மாணவர்களின் விளையாட்டு நடவடிக்கைகளையும் பொறுத்த மட்டில் அவர்கள் பல்கலைக்கழக விளையர்டுத்துறை தொகுதியி உள்ள சாதனங்களையே பாவித்து வந்தனர். கேள்வி எதுவும் இல்லாதவிடத்து மேலதிகமான சாதனங்களைக் கொள் முதல் செய்யத் திட்டமிடப்பட்டிருந்தத போதும் கொள்முதல் எதுவும் இடம்பறெவில்லை. | |
| (எ) நடவடிக்கைத் திட்டத்துக்கு ஏற்ப 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் ரூ 100000 என்னும் தொகைக்கான விளையாட்டு உபகரணங்களைக் கொள்முதல் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. | (பீ) அநேகமான வெற்றிடங்கள் கப்பற்துறைப் பிரிவிலேயே காணப்பட்டன. ஆனால் கப்பற்துறைக்கான வசதிகள் இல்லாத காரணத்தால் மாணவர்கள் பதிவு செய்யப்படவில்லை | |

| | | |
|---|---|---|
| எவ்வாறாயினும் இந்த ஆண்டுகளில் எந்தவொரு தொகையும் செலவு செய்யப்படவில்லை.<br><br>(பீ)<br>நிறுவகத்தின் ஒன்பது பிரிவுகள் செயற்பட்டு வந்தன. மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுமிடத்து இவர்கள் 03 பிரிவுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அதாவது 2013-2014 மற்றும் 2014-2015 ஆம் கல்லூரியாண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். 5 வீதம் தொடக்கம் 40 வீதம் வரையான 09 மாணவர் வெற்றிடங்கள் முறையே நிலவினதுடன் 33 வீத தொடக்கம் 40 வீதம் வரையான வெற்றிடங்கள் 2015-2016 ஆம் கல்லூரி ஆண்டுக் காலத்தின் போது 02 பிரிவுகளில் நிலவின.<br><br>(சி) (1) 2016 ஆம் ஆண்டின் முதலாவது ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றிய 504 மாணவர்களில் 334 மாணவர்களே பரீட்சையில் சித்தியடைந்தனர் என்பதுடன் 34 வீதமான மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையவில்லை. சித்தியடையாத மாணவர்களுக்கான பரீட்சையில் பொறிமுறை எந்திரவியல் பிரிவைச் சேர்ந்த 36 வீதமான மாணவர்களும் ஆடை மற்றும் புடவைத் தொழிநுட்பவியல் பிரிவைச் சேர்ந்த 39 வீதமான மாணவர்களும் பரீட்சையில் சித்தியடையத் தவறிவிட்டனர். | என்பதுடன் வேறு பாடநெறிகளுக்குப் பதிவு செய்த சில மாணவர்கள் தமது பதிவுகளை விலக்கக் கொண்டுள்ளனர். | |
| கணக்காய்வுக் கருத்து | விளக்கம் - எடுத்த நடவடிக்கை | |
| (சி) (11) 2016ம் ஆண்டில் இரண்டாம் ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றிய 484 மாணவர்களுள் 357 மாணவர்கள் மட்டும் சித்தியடைந்ததுடன் 27 வீதமான மாணவர்கள் இரண்டாவது பரீட்சையில் தவறிய மாணவர்களுக்கென நடாத்தப்பட்ட பரீட்சையில் பொறிமுறை எந்தரவியில் | | |

| | | |
|---|---|---|
| பரீட்சைக்குத் தோற்றிய 41 வீதம் மாணவர்களம் ஆடை மற்றும் புட.வை தொழிநுட்பவியலைச் சார்ந்த 35 வீதமான மாணவர்களும் பரீட்சையில் தவறியுள்ளனர்.<br><br>(டி) மாணவரிடையே போட்டித் தன்மையை மேம்படுத்தும் நோக்கில் 9 பிரிவுகளை காணும் 03 கல்விசார் இணை நிகழ்ச்சித் திட்டம் ஒன்றையும் 03 கல்விக்கு புறம்பான நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போது ஒரு பொருட் காட்சியும் ஒரு வளையாட்டு நிகழ்ச்சித் திட்டமும் மட்டுமே நடாத்தப்பட்டன.<br><br>(இ) தகவல் தொழில்நுட்பவியல் (த.தொ) அளாவறி மதிப்பீடு (அ.ம) ஆகிய 02 பாடநெறிகளுக்கான பாடநெறிகளை 2016 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு அறிமுகம் செய்வதற்கு முன்மொழியப்பட்ட போதும் 2016 ஆம் அண்டில் அப்பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவில்லை.<br><br>(எப்) புத்தாக்கம் மற்றும் படைப்புகளுக்கென 2016 ஆம் ஆண்டுக்கென ஆராய்ச்சித் தொகை ஏற்பாடு செய்யப்பட்ட போதும் ரூபா 478215 என்னும் தொகை செலவிடப்பட்டு 48 வீதமான ஏற்பாட்டுத் தொகை செலவு செய்யப்பட்டு 39 ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. | (டி) 2016 ஆம் ஆண்டுக் காலத்தின் போது விடயங்கள் தொடர்பிலும் வெளியக நிகழ்ச்சித் திட்டங்கள் வேலை மட்டிலான விபரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.<br><br>(இ) முன்மொழியப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்துக்கான கூட்டமைப்பு வசதிகள் தொழிநுட்ப நிறுவகத்தின் புனர் நிறுவுதல் மற்றும் அபிவிருத்திக்கு ஊடாகப் பெறப்பட்ட போதும் இந்தக் கற்கை நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பபதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.<br><br>(எப்) 2016ஆம் ஆண்டின் போது இரண்டு உத்தியோகத்தர்கள் மட்டுமே ஆராய்ச்சி நடத்துவதற்கான நிதி மானியத்தைக் கோரியிருந்தனர். | |
| 4.2 பதவியினர் நிருவாகம் | பதவியினர் நிருவாகம் | |
| பின்வருவன அவதானிக்கப்பட்டன.<br><br>(எ) நிறுவகத்தின் கல்விசார் மற்றும் கல்வி சாராப் பதவியினர் வெற்றிடங்கள் முறையே 28 உம் 11 ம் ஆக இருந்ததுடன் அவை 48 வீதமாகவும் 200 வீதமாகவும் முறையே அமைந்திருந்தன. | (எ) நிறுவகத்துக்கான வசதிகள் இல்லாததன் காரணத்தால் வெற்றிடங்களை நிரப்பக்கூடுமாதாக இருக்கவில்லை. ஆனால் நிறுவகத்தின் சோதனைக் கூட உதவியாளர் ஆகியோர் மட்டில் மொறட்டுவைப் பல்கலைக்கழகப் பதவியினரிடமிருந்து பெறப்பட்டது. தியகம வளவுக் இடம்பெயர்ந்து அபிவிருத்தியடைந்த பின்பு வெற்றிடங்களை | |

| | | |
|---|---|---|
| (பீ) பல்கலைக்கழகத் தாபனக் கோவையின் அத்தியாயம் 19 இன் பிரிவு 18.1 (1) இந் நியதிகளின் படி பதவியினரிடையே வெற்றிடம் ஒன்று இருப்பதாக அறியவந்த உடன் நியமிக்கும் அதிகாரி அந்த வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும் 2016 திசம்பர் 31 ஆம் திகதி தானும் 2015 சனவரி 15 ஆம் திகதி தொடக்கம் நிறுவகத்தில் வெற்றிடமாயிருந்த பிரதிக் காசாளர் பதவியை நிரப்புவதற்கான நடவடிக்கை ஒன்றும் எடுக்கப்படவில்லை. | நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>(பீ) முகாமைத்துவ சேவைகளின் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு 2017 ஆம் ஆண்டில் பிரதி காசாளர் மற்றும் சிரே'ட உதவிக் காசாளர் பதவி ஆகிய பதவிகள் ஒன்றிணைக்கப்பட்டதுடன் இத்திகதியில் பிரதிக் கணக்காளர் பதவி வெற்றிடமாக இல்லை. | |

| கணக்காய்வுக் கருத்தும் | விளக்கம் ∴ எடுத்த நடவடிக்கை |
|---|---|
| (சீ) தகமை கொண்ட பதவியினரைத் தாபிக்கும் நோக்கில் 50 வருகை தரும் விரிவுரையாளர்ககளை ஆட்சேர்ப்பதற்கென மீளாய்வு ஆண்டுக் காலத்தின் போது ரூ 15,000,000 என்னும் தொகை ஒதுக்கப்பட்ட போதும் வருகை தரும் 21 விரிவுரையாளர்களும் 35 போதனாசிரியர்களும் ரூ 14,975,457 என்னும் தொகை செலாவிடப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. | (சீ)2016ஆம் ஆண்டுக்காலத்தின் போது 56 வருகை தரும் விரிவுரையாளர்களும் வெளியக உசாத்துணைவர்களும் பணிக்கமர்த்தப்பட்டு ரூ.15 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன் இத் தொகை வருகை தரும் விரிவுரையாளர் களுக்கும் உசாத் துணைவர்களுக்கு மானதாகும். |
| (5) கணக்கிடுதலும் சிறந்த ஆளுமையும் | (5) கணக்கிடுதலும் சிறந்த ஆளுமையும் |
| 5.1 நிதிக்கூற்றுகள் சமர்ப்பித்தல் | 5.1 நிதிக்கூற்றகள் சமர்ப்பித்தல் |
| 2013 யூன் 02ஆம் திகதிய அ.தொ.சு அரசாங்கத் தொழில் முயற்சிகள் சுற்றிக்கை இல.12இன் பிரிவு 6.5.1 இன்றை நியதிகளின் படி ஆண்டுக்கான கணக்குகள் முடிவுறுதப்பட்டு 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்களும் ஆண்டறிக்கையின் வரைவு கணக்காய்வாய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப் படவேண்டும். எவ்வாறாயினம் 2016ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரலில் 28 அன்றே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | முகாமைத்துவச் சபையில் 16.02.2017ஆம் திகதியன்று இடம்பெற்ற 193ஆவது கூட்டத்தின் பொது பெறப்பட்ட அங்கீகாரத்துடன் 2016ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் 27.02.2017ஆம் திகதியன்று முதல் முறையடக்கக் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டது. அதன் பின்பு கணக்காய்வாளர் அனுமதியுடன் திருத்தம் செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 25.04.2014 அன்று சமர்பிக்கப்பட்டது. |
| 5.2 உள்ளக கணக்காய்வு | 5.2 உள்ளக கணக்காய்வு |
| டி.எம். ∴ எ 2009ல் 3ஆம் பந்தியின் நியதிகளின் படி உள்ளக் கணக்காய்வு மட்டிலான வழிகாட்டல்களின் படி ஒரு தனியான உள்ளக கணக்குக்கு மற்றும் தனியான கணக்காய்வுக் கூறு ஸ்தாபிக்கப்படவில்லை. | நிறுவகத்திற்கான பதவியினரை அங்கீகரித்த வேளையில் நிறுவகத்தின் தேவையை கருத்திற்கொண்டு 2017ஆம் ஆண்டுக்கான உள்ளக உதவிக் கணக்காய்வாளர் பதவிக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. இனிவரும் காலத்தில் இந்த உத்தியோகத்தர்களே நிறுவகத்தின் கணக்காய்வு பதவியைச் செய்வார்கள் |
| 6.முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | 6.முறைமைகளும் கட்டுப்பாடுகளும் |
| கணக்காய்வுவேளையில் முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலும் அவதானிக்கப்பட்ட முறைப்பாடுகள் காலத்துக்காலம் நிறுவகத்தின் | |

| | | |
|---|---|---|
| பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வருவன தொடர்பில் விசேட கவனம் வேண்டப்படுகின்றது. | | |
| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பிரதேசங்களும் | அவதானிப்புகள் | |
| (எ) பதவியினர் நிருவாகம் | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை | (எ) தியகமயில் மொ.ப.தொ.நி.தைக் கொண்டு சென்று மீள்தாபிப்புச் செய்த பின்பு வெற்றிடங்களை நிரப்பும் பணி தொடங்குகின்றது. |
| (பீ) வரவுசெலவுத் திட்டக்கட்டுப்பாடு | உறுதியான எதிர்வு கூறல் இல்லாது வரவு செலவுத் திட்டம் தயாரித்தல் | (பீ) ஆண்டுக்காலத்தின் போதுதான மாற்றங்களைக் கருத்தில் கொண்டு வருமானம் மற்றும் செலவுமட்டிலான எதிர்கூறல் மாறுவதற்கு இடமுண்டு. |
| (சி) நிதி முகாமைத்துவம் | தாபித்த நிதியங்களின் குறிக்கோளை எய்துவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியது. | (சி) மொ.ப.தொ.நியை வேறு இடத்தில் தாபித்ததின் பின் கருத்திடத்தின் குறிக்கோள்களை செயன்முறைப்படுத்துவதற்கு இந் நிதியங்கள் ஒழுங்காக உபயோகிக்கப்படும் |
| (டி) இயக்கத்தை கட்டுப்படுத்தல் | உடன்படிக்கைகள் முறிகள் மட்டில சரியான நடவடிக்கை அவற்றை மிறிய இடத்தில் எடுக்கத் தவிறியமை. | (டி) முறிகள் உடன்படிக்கைகள் மட்டில் சரியான நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் விரிவுரையாளர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள படியால் தொடர்பு கொள்வதில் பிரச்சினைகள் இருப்பதால் அறவிடுதலில் தாமதம் ஏற்பட்டுள்ளது. |

ஒப்பம் : திருமதி எம்.எம்.பி.டி சமரசேகர
பணிப்பாளர் மொ.ப.தொ.நி